**இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை-2019**

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இலக்கம் 38 கொண்ட நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய எனது அறிக்கையை இந்த அறிக்கை காட்டுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்கான முகாமைத்துவத்தினதும் மற்றும் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படுதல் வேண்டும். அவ்வதிகார சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற ஒவ்வொரு நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள் விதிகளினால் காட்டப்படக்கூடியவாறான கால எல்லைக்குள் அந்நிறுவனங்களினது வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தினரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேுண்டும். அவ்வதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரத்தில் சமர்ப்பிப்பதனை உறுதிப்படுத்த வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும். நிறுவனங்கள் தொடர்பான வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். அவ்வாறாயினும், 2003 யூன் 02 ஆந் திகதிய இலக்கம் பீஈடி/12 கொண்ட திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம், கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2019 வருடத்திற்கான ஆளுகை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கையினது திகதி வரையிலும் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 2.1 எழுத்து மூல சட்ட ஒழுங்குகள் அல்லது ஆளுகை சபையினால் சமர்ப்பிக்ககப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட பணிப்புக்களுக்கு இணங்காமை

சட்டம், ஒழுங்கு, பிரமாணம் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழ் காட்டப்பட்டுள்ளன.

| | சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றின் கவனத்திற்கு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இலக்கம் 25 கொண்ட (திருத்தப்பட்ட) ஒன்று திரட்டப்பட்ட பெறுமானம் மீதான வரிச் | வரியிடப்படும் பொருட்கள், சேவைகள் அல்லது வழங்கல் காலாண்டுக்கு ரூபா 3,000,000 அல்லது வருடாந்தம் ரூபா 12,000,000 | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வரியினை மரமுந்திரிகை விற்பனை விலையுடன் சேர்க்கப்படுவதன் மூலம் ஏற்படும் விலை உயர்வு காரணமாய் கூட்டுத்தாபன மர முந்திரிகைக்கான | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சட்டம் மற்றும் 2018 இலக்கம் 20 கொண்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் சட்டம் | மீறப்படுமாயின் VAT மற்றும் NBT க்காக பதிவு செய்யப்பட்டு பணம் செலுத்தப்பட வேண்டியுள்ள போதிலும், கூட்டுத் தாபனத்தினால் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 106,475,947 க்கான மொத்த விற்பனையினை ஈற்றுக் கொண்டிருந்த போதிலும் VAT மற்றும் NBT க்கான பதிவினை அல்லது வரி செலுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சந்தை விலையில் ஏற்படக்கூடிய பாதகமான தாக்கத்தினை மற்றும் மர முந்திரிகை செய்கை உற்பத்தியின் கீழ் வருவதனால் அதற்கான விசேட கவனம் செலுத்தப்பட்டு விசேட வரிச் சலுகை ஒன்றினை பெற்றுக் கொள்வதற்காக கோடு அமைச்சின் ஊடாக நிதி அமைச்சினைக்கு எழுத்துமூல வேண்டுகோள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 1958 ஆம் இலக்க 15 கொண்ட ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 10(2) ஆம் பிரிவு | ஊழியர் சேமலாப நிதியத்தின் சந்தாப் பணம் செலுத்தும் போது சம்பந்தப்பட்ட மாதத்தின் சந்தாப் பணத்தினை அதற்கு அடுத்த மாதம் முடிவடையும் தினத்திற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு இவ்வருடத்திற்கான ஏப்ரல், மே, யூன், யூலை மாதங்களுக்கான ரூபா 6,612,177 க்கான ஊழியர் சேமலாப நிதிய பணத்தினை செலுத்தப்படாது இருந்தது. 2020 யூன் 30 ஆந் திகதிக்கு உள்ளவாறான 2019 வருட மே, யூன், யூலை மாதங்கள் தொடர்பான சந்தா பணத்தினை செலுத்தப்படாது இருந்தது. | கூட்டுத்தாபனத்தில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக இந்த கணக்காய்வு பந்திகளில் குறிக்கப்பட்டுள்ள செலுத்தல்கள் தாமதமாய் உள்ளதுடன் நிதி கிடைக்கப் பெற்றவுடன் சம்பந்தப்பட்ட செலுத்தல்களை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |
| (இ) | 1983 இலக்கம் 12 கொண்ட ஊழியர் பணிக் கொடைச் சட்டம் | ஊழியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்று ஒரு மாதத்தினுள் பணிக்கொடையினை செலுத்த வேண்டி இருப்பினும் மீளாய்வு | கூட்டுத்தாபனத்தில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக இந்த கணக்காய்வு பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்தல்கள் தாமதமாய் உள்ளதுடன் நிதி | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆண்டில் ஓய்வு பெற்ற 8 உத்தியோகத்தர் களினது பணிக் கொடையினை 2020 ஒக்டோபர் மாதம் வரையிலும் செலுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கிடைக்கப் பெற்றவுடன் சம்பந்தப்பட்ட செலுத்தல்களை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | |
| (ஈ) | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவு | கூட்டுத்தாபனத்தினால் இன்வொயிஸ் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் கணக்காய்வு கட்டணத்தினை தீர்க்கப்பட வேண்டியுள்ள போதிலும், 2005 ஆம் வருடம் முதல் 2018 ஆம் வருடம் வரையில் செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வு கட்டணமான ரூபா 2,552,208 மீளாய்வு ஆண்டு வரையிலும் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. | கூட்டுத்தாபனத்தில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக இக்கணக்காய்வு பந்திகளில் குறிக்கப்பட்டுள்ள செலுத்தல்கள் தாமதமாய் உள்ளதுடன் நிதி கிடைக்கப் பெற்றதுடன் சம்பந்தப்பட்ட செலுத்தல்களை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய கணக்காய்வு கட்டணத்தினை செலுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | 2012 யூலை 24 ஆந் திகதிய பொது வியாபாரம் தொடர்பான குழு நிலை தீர்மானங்கள் | பொது வியாபார குழுவினால் கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியான உரிமையற்ற காணிகளின் உரிமையினை கூட்டுத்தாபனத்திற்கு பணத்திற்கு சொந்தமாக்கிக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளும் படி அறிவுரை செய்யப்பட்டிருந்த போதிலும், பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் காணி, சீர்திருத்த ஆணைக்குழுவினால் பெற்றுக் | தற்போது இலங்கை மர முந்திரிகை கூட்டுத்தாபனம் மூலம் பாவனை செய்யப்படும் காணிகளின் மொத்த அளவு 15,329 ஏக்கராக குறிப்பிடப் பட்டிருந்த போதிலும், அது 12,044 ஏக்கராக திருத்தப்படல் வேண்டும். அதில் 9,674 ஏக்கர் வனம்சார் தோட்டங்கள் மற்றும் விதை பதனிடு தோட்டங்களின் உரிமையினை நீண்ட கால குத்தகை அடிப்படையின் கீழ் இலங்கை மர முந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதன்படி | காணிகளின் சட்ட ரீதியான உரிமையினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| கொடுக்கப்பட்டுள்ள மரமுந்திரிகை செய்கைக்கான 15,329 ஏக்கர் காணியின் சட்டரீதியான உரிமையினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை 2020 மே 31 ஆந் திகதி வரையிலும் முடிக்கப்பட்டிருக்க வில்லை. | அக்காணிகள் அமைந்துள்ள பிரதேசங்களில் உள்ள பிரதேசசெயலாளர்களுடன் சேர்ந்து மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், 1,874 ஏக்கர் காணித் துண்டுகள் ஏற்கனவே நீண்டகால குத்தகை அடிப்படையில் கூட்டுத்தாபனம் சுவீகரிக்கப் பட்டுள்ளதுடன் அவைகளுக்கான வரியினை செலுத்த வேண்டி உள்ளது. ஏனைய காணிகளின் உரிமையினை இக்கூட்டுத்தாபனத்திற்கு சுவீகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 2.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் புத்தளம் மற்றும் கமன்தழுவ பரிசோதனை மத்திய நிலையத்திற்காக மீண்டெழும் சன்மானத்தின் கீழ் ரூபா 3,412,063 மற்றும் மூலதன சன்மானத்தின் கீழ் ரூபா 3,927,223 செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வு ஆண்டினுள் புதுப் பரிசோதனை எதுவும் ஆரம்பிக்கப்பட்டிலாது இருந்ததுடன் இரு மத்திய நிலையங்களிலும் முன்னைய வருடங்களிலிருந்து முன்னெடுக்கப்பட்டு வந்த 08 பரிசோதனைகள் மாத்திரம் | மரமுந்திரிகை தொடர்பாக மேற்கொள்ளப்படும் சகல பரிசோதனைகளும் தொடர்ச்சியாக பல வருடங்களாக மேற்கொள்ளப்படுவதுடன் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பரிசோதனைகள் அது போன்றவைகளாகும். இப் பரிசோதனைகளின் பயனாக இவ்வருடம் புதுவித மேலும் விருத்தி செய்யப்பட்ட 03 வகையான மரமுந்திரி அறிமுகப்படுத்தப்பட்டு அடுத்து வருடம் இன்னும் சீராக்கப்பட்ட புதுவித 02 வகை மரமுந்திரி களத்திற்கு அறிமுகப்படுத்த உள்ளன. நான்கு புதிய வேலை திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. பரிசோதனை பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற | பரிசோதனைகளின் முன்னேற்றத்தினை கணக்கிடக் கூடியவாறான தொடர் மற்றும் முறையான முன்னேற்ற அறிக்கை பராமரிப்பினை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டு வந்தன. மேலும் பரிசோதனைகளின் முன்னேற்றத்தினை கணிக்கப்பட கூடிய தொடர் மற்றும் முறையான முன்னேற்ற அறிக்கையினை பராமரிப்பினையும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | பரிசோதனை வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான மாதாந்த முன்னேற்ற அறிக்கையினை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படும். | |
| (ஆ) | 2019 யூலை 02 ஆந் திகதி நடாத்தப்பட்ட 524 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தில் விற்பனை மேம்பாட்டிற்கான முறையான விற்பனை திட்டம் ஒன்றினை தயார் செய்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | கடந்த கால எல்லையினுள் ஏற்பட்ட Covid - 19 தொற்று காரணமாக விற்பனைசெயற்பாட்டில் ஏற்பட்ட மாற்றத்தினை கவனத்தில் கொண்டு அத்திட்டத்தினை திருத்தப்பட்டுள்ளதுடன் திருத்தப்பட்ட விற்பனைக்கான திட்டத்தினை பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு அமைய செயற்பட வேண்டியமை. |
| (இ) | 2019 ஆகஸ்ட் 30 ஆந் திகதி நடாத்தப்பட்ட 526 வது பணிப்பாளர் சபை கூட்டத்தில் விற்பனைப் பிரிவு தொடர்பாக எதிர்காலத்திற்காக உற்பத்தி திட்டம் ஒன்றினை மற்றும் அதற்கு இணங்கக் கூடியதான விற்பனைத் திட்டமொன்றினை தயாரித்து பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கும் படி மற்றும் அரச நிறுவனங்களுக்கு சலுகை விலையில் மரமுந்திரிகை பெற்றுக் கொடுப்பதற்கான முறையொன்றினை தயாரித்து கூட்டுத்தாபன மரமுந்திரிகையை பிரபல்யப்படுத்தும் வேலைத் திட்டம் ஒன்றினை தயாரிக்கும் படியும் பணிப்பாளர் சபையினால் அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | அரச நிறுவனங்களுக்கு சலுகை விலைக்கு மர முந்திரிகை பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தினை அமுல்படுத்துவதனை தற்போது மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் அதன் ஆரம்ப கட்டமாக நிதி அமைச்சின் பணிக்குழாம் அங்கத்தினருக்கு 10 சதவீதத்திற்கு அண்மித்த விற்பனைக் கழிவினை பெற்றுக் கொடுக்கப்பட்டு மரமுந்திரி விற்பனை செயற்பாடு இவ்வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு அமைய செயற்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வயின் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் மேற்கொள்ளப்படும் பணியாக காட்டப்பட்டுள்ள ரூபா 246,127 க்கான தொகையினை மற்றும் ரூபா 5,550 க்கான போத்தல்களும் வருடத்தின் இழப்பாக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. மேலும், இத்திட்டத்திற்காக சென்ற ஆண்டில் ரூபா 66,700 ஆலோசனைக் கட்டணமாக வெளிநபர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனம் அதனால் எவ்வித வருமானம் பெற்றுக்கொள்ளவில்லை. | இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் 2018 வருட வயின் தயாரிப்பினது மாதிரியை பகுப்பாய்வாளர் திணைக்கத்திற்கு அனுப்பி வைத்ததன் பின்னர் அதில் நேரொத்த ACID அளவு அதிகம் என அறிவிக்கப்பட்ட மையினால் அவ் வயின் தொகையினை நிராகரிக்கப்பட்டது. அதன்படி தேவையான மாற்றங்கள் மேற்கொள்வதற்கு முயற்சி செய்த போதிலும் அவையாவும் பலனற்று போயின. ஆகவே ஆளுகை அதிகார சபையின் அங்கீகாரத்துடன் யாவும் புறந்தள்ளப்பட்டன. | சரியான ஆலோசனையின் கீழ் மாதிரியொன்றினை தயாரித்து பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பரிந்துரையினை பெறப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டினுள் பணிக்கொடை நிதியினை உரிய தினத்தில் செலுத்தாமையினால் மிகைக் கட்டணமாக ரூபா 96,607 செலுத்தப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்தில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக பணிக்கொடையினை செலுத்துவதில் ஏற்பட்ட தாமதத்தினால் இம்மிகைக் கட்டணத்தினை செலுத்த நேர்ந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டியமை. |
| (ஊ) | மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் நடைமுறை சொத்துக்களின் விகிதாசாரம் மற்றும் உடனடி சொத்துக்களின் விகிதாசாரம் முறையே 1.5 மற்றும் 0.64 பெறுமானத்தில் உள்ளதுடன் வருட இறுதி மொத்த தொகை ரூபா 14,608,861 ஆன இணைக்கப்பட்ட செலுத்தல்கள் மற்றும் ஊழியர் சம்பளத்திலிருந்து செய்யப்பட்டுள்ள | கூட்டுத்தாபனத்தில் நிதி நெருக்கடி உள்ள போதிலும் நாளாந்த நடவடிக்கைச் செயற்பாடுகள் கூடிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்ட நிதி நெருக்கடி காரணமாக வைத்திய உதவி கொடுப்பனவுகளிலும் தாமதம் ஏற்பட்டதுடன் எவ்வாறாயினும், நிகழ் ஆண்டினுள் 2018 வருடத்திற்கான சகல வைத்திய உதவி கொடுப்பனவுகளின் 1/3 யும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. நிலவும் நிதி | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கழித்தல்களை செலுத்தப்படாமையினால் கூட்டுத்தாபனம் அன்றாட மூலதன நெருக்கடிக் குட்பட்டிருப்பதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மீதமுள்ள வைத்திய உதவிப் பணத்தையும் பணிக்குழு அங்கத்தினருக்கு செலுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (எ) | திறைசேரி அனுமதியில்லாது மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் 2013 யூன் 04 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டிருந்த வைத்திய உதவி திட்டத்தின் கீழ் ஊழியர் மற்றும் குடும்ப அங்கத்தினர்களுக்காக வெளிவாரி வைத்திய செலவுக்காக வருடாந்தம் ரூபா 15,000 செலவினை குறைநிரப்பு செய்வதுடன் அதற்காக ஊழியர் சம்பளத்திலிருந்து அங்கத்துவ கட்டணமாக மாதாந்தம் ரூபா 300 அறவிடப்பட்டிருந்தது. ஆயினும், இத்திட்டத்தின் கீழ் ஊழியர் வெளிவாரி சிகிட்சைக்கான பற்றுச்சீட்டினை முன்வைத்திருந்த போதிலும் அச்செலவினை குறைநிரப்புவதை 03 வருட காலமாக மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மீளாய்வாண்டு இறுதியில் செலுத்தப்பட வேண்டிய வைத்திய உதவிப் பணம் ரூபா 3,470,925 ஆக இருந்தது. | கூட்டுத்தாபனத்தில் நிதி நெருக்கடி நிலவிய போதிலும் நாளாந்த நடவடிக்கை செயற்பாடுகள் கூடிய பட்சத்தில் பேணப்பட்டு வருகின்றது. முன்குறிப்பிட்ட நிதி நெருக்கடி காரணமாக வைத்திய உதவி கொடுப்பனவிலும் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் எவ்வாறாயினும், நிகழ் ஆண்டினுள் 2018 வருடத்திற்கான சகல வைத்திய உதவி கொடுப்பனவுகளின் 1/3 யும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. நிலவும் நிதி நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மீதமுள்ள வைத்திய உதவி பணத்தினையும் பணிக் குழு அங்கத்தினருக்கு செலுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | திறைசேரி அனுமதியினை பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் கொடுப்பனவுகளை முறையாக மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | வர்த்தக நாற்று மேடையின் கீழ் கடன்பட்டோராக ரூபா 10,426,696 க்கான தொகையினை | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைக்கப் பெற வேண்டிய கடன் பெறுமானத்தினை | கிடைக்கப் பெற வேண்டிய பணத்தினை துரிதமாக அறவிடப்பட்டுக் |

| | | | |
|---|---|---|---|
| | இருப்பதுடன் அதில் ரூபா 9,466,200 ஆனது 07 வருடங்களுக்கு மேல் பழமையான பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய பெறுமானமாகும். இத்தொகையினை அறவிட முடியாத நிலையில் இருப்பதாக அவதானிக்கப்பட்டது. | அறவிடுவதற்காக பாரிய முயற்சியினை மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது சாத்தியப்படவில்லை. எவ்வாறாயினும், அக்கடன் பணத்தினை அறவிடப்பட்டு கொள்வதற்கு தொடர்ந்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஐ) | 06 வருடங்கள் கடந்துள்ள நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு செலுத்த வேண்டியுள்ள ரூபா 3,500,000 க்கான பணத்தினை மற்றும் அதற்கான ரூபா 927,500 வட்டியினையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக கடனினை செலுத்துவதற்கு தாமதமாய் உள்ளது. நிதி நிலைமை சீரானதுடன் பகுதி பகுதியாக ஆவது இக்கடனினை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கடன் பணத் தொகையும் மற்றும் அதன் வட்டியையும் முறையாக செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் 19 மோட்டார் சைக்கிள்கள் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 175,000 க்கான வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. 2019 மே மாதம் 28 ஆந் திகதி நடந்த 523 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தில் மோட்டார் சைக்கிள் 19 எண்ணிக்கையினையும் ஒரு நபரே கொள்வனவு செய்வதாயின் அதனை மதிப்பீட்டு பெறுமானத்தை விட விற்பனை செய்யப்பட வேண்டும் என காட்டப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் ரூபா 343,500 மதிப்பீட்டு பெறுமானமுள்ள 19 மோட்டார் சைக்கிள் களையும் ரூபா 175,000 | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மிகவும் சேதமடைந்த ஓடு நிலையில் இல்லாத அவ்வாறே திருத்தப்பட்டு பாவனையினை மேற்கொள்வது கூட்டுத்தாபனத்திற்கு சாதகமற்ற 19 மோட்டார் சைக்கிள் எண்ணிக்கையினை கூட்டுத்தாபனத்தின் நெதகமுவ மீள் திருத்தும் மையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்ததுடன் அவைகளை விற்பனை செய்வதற்காக விளம்பரம் ஒன்றும் செய்யப்பட்டது. அதற்கிடையில் அம் மோட்டார் சைக்கிள்களுக்காக மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலமாக மதிப்பீட்டு அறிக்கையினையும் பெற்றுக்கொள்ளப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட பத்திரிகை விளம்பரத்திற்கு சாதகமான விளைவு | பெறுகை வழிகாட்டலுக்கு அமைவாகவும் மற்றும் பணிப்பாளர் சபையின் தீர்மானங்களுக்கு அமைவாகவும் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெறுமதியினைக்கு தனி நபர் கொள்வனவாளர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. | கிடைக்காமையினால் பிராந்திய ரீதியாக விலைமனு கோரப்பட்டதுடன் அச்சந்தர்ப்பத்தில் மோட்டார் சைக்கிள் எல்லாவற்றையும் மொத்தமாக வாங்குவதற்கு கொள்வனவாளர் ஒருவர் முன்வந்தார்.<br><br>இதற்கு மேலும் இப்பழுதடைந்த மோட்டார் சைக்கிள்களை கூட்டுத்தாபன பொறுப்பில் பேணப்படுவதனால் அவையினை இடிபாட்டு பெறுமதிக்காவது விற்பனை செய்யாது போவதனால் மேற்படி மோட்டார் சைக்கிள்களின் நடைமுறை நிலைமையினை அனுசரித்து கிடைக்கப் பெற்ற பெறுமதி நியாயமானதாக உணரப்பட்டாலும் கூட்டுத்தாபனத்தின் நட்டத்தினை குறைத்துக் கொள்ளும் நோக்குடன் மேற்படி மோட்டார் சைக்கிள்களை அக் கொள்வனவாளருக்கு விற்கப்பட்டது. | |

## 2.3 நடவடிக்கை வினைத்திறன் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 வருடம் அம்பாறை ஹாடி பெருந் தோட்டத்தில் அமைந்துள்ள பயிற்சி மையத்தினை பயணிகளின் உல்லாசப் பங்களாவாக திருத்தி அமைக்கவும் மற்றும் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காகவும் ரூபா 5,050,354 க்கான தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், இப்பயணிகள் பங்களாவினை வாடகைக்கு கொடுக்கப்பட்டதன் | இப்பயணிகள் பங்களாவினை வெளித்தரப்பினருக்கு குத்தகைக்கு கொடுக்கப்படாது கூட்டுத்தாபனம் மூலமாகவே பயணிகளின் கோரிக்கையினை பெற்று பேணிச் செல்வதற்கு ஆளுகை அதிகார சபையினால் முடிவு செய்யப்பட்டள்ளது. அதற்கு தேவையான விளம்பர செயற்பாடுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பாக மேல்மட்ட அவதானத்தினை | பயணிகளுக்கான பங்களாவின் மூலமாக கூடிய வருமானத்தினை ஈட்டிக் கொள்வதற்கான நடவடிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலம் மீளாய்வாண்டில் ரூபா 48,000 க்கான வருமானம் மாத்திரம் ஈட்டிக் கொள்ளப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கையினை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | புத்தளத்தில் உள்ள மரமுந்திரி பதனிடு மத்திய நிலையத்தில் உள்ள மத்திய நிலையத்தில் உள்ள மர முந்திரிகை வேக வைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட 24 வருடத்திற்கு மேல் பழைமை வாய்ந்த ரூபா 526,700 பெறுமதியான கொதிகலன் முறைமையினை ஏலத்தில் விடுவதற்கும் மற்றும் அம்மத்திய நிலையத்தில் உள்ள 11 மர முந்திரிகை, கைவெட்டு இயந்திரங்களையும் பாவனை செய்வதில் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | கொதிகலனினை அதற்கு மேலும் பாவனை செய்ய முடியாமையினால் சம்பந்தப்பட்ட அப்புறப்படுத்தும் செயற்பாடுகளுக்காக அதற்குரிய மதிப்பீட்டு அறிக்கையினை பெற்றுக் கொள்வதற்காக இலங்கை தேசிய பொறியியலாளர் பரிசோதனை மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததும் மேற்கொண்டுள்ள அப்புறப்படுத்தும் செயற்பாடுகள் முடிக்கப்படும். திடீர் மின் தடையின் போது பதனிடு செயற்பாடுகளை தொடர்ந்து பேணிச் செல்வதற்காக கைவெட்டு மர முந்திரிகை இயந்திரங்கள் பாவனை செய்யப்படும். | அப்புறப்படுத்தும் செயற்பாடுகள் துரிதப் படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | வயின் திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 142,980 க்கான ஒட்டுத்துண்டுகள் அத்திட்டம் நிறுத்தப்பட்டதன் பின்னர் வீணடிக்கப்பட்டுள்ளதனை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. | வயின் தயாரிப்பினை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் சுற்றுப் பொருட்கள் எல்லாவற்றையும் பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். | வயின் உற்பத்தியினை ஆரம்பிக்கப்பட்டு சுற்றுப் பொருட்களை கூடிய விரைவில் பாவனை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2.4 பணிக்குழு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தில் மூத்த மட்டத்திலுள்ள 02 வெற்றிடங்களும், மூன்றாம் மட்டத்திலான 08 வெற்றிடங்களும் இரண்டாம் மட்டத்திலான 45 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்திலான 11 வெற்றிடங்களும் இருந்த போதிலும் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | அமைச்சுப் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2.5 பேண்தகு அபிவிருத்தி நோக்கினை அடைந்து கொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 வருடத்திற்கான ‘‘நிகழ்ச்சி நிரல்’’ மற்றும் 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய இலக்கம் என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 கொண்ட தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பேண்தகு அபிவிருத்தி நோக்கினை அடையும் பொருட்டு நிறுவனத்தினால் அடைந்து கொள்ளப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் இல் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நிலவும் இடைவெளிகள் போன்றே முன்னேற்றத்தினை அளந்து பார்ப்பதற்கு பொருத்தமான காண் படங்களை இனங்கண்டு கொள்ள வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அது போன்ற காண் படங்களை இனங்கண்டு நோக்குகளின் மூலம் அடைந்து கொள்ளப்பட்ட அளவு மற்றும் விலகிச் சென்றமை போன்றே கவனத்திற்கு கொள்ளப்பட வேண்டிய பலவிதமான களங்களினை இனங்கண்டு கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 நடைமுறைத் திட்டத்திற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |